சிவமயம்

REGISTERED AS A NEWSPAPER IN CEYLON
P. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ கார்த்திகை மீ கo உ (1947 நவம்பர் 25 செவ்வாய்க்கிழமை) [ இல கூரு

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

நிலத்தவர் வான மாள்பவர் கீழோர் துயர்கெட நெடியமாற் கருளால்
அலைத்தவல் லசுர ராசற ஆழி யளித்தவ னுறைவிடம் வினவில்
சலத்தினுற்பொருள்கள்வேண்டுதல்செயயாத் தன்மைபார்நன்மையான்மிக்க
உலப்பில்பல் புகழா ரோமமாம் புலியூ ருடையவர் வடதளி யதுவே.

—திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

## சம்பளத்தை குறைக்க

### தகநாயக்காவின் முயற்சி

முந்திய அரசாங்கசபையில் அங்கத்தவர்களுக்கு மாதந்தோறும் 500 ரூபாவும், மந்திரிமாருக்கு 1500 ரூபாவும் வேதனம் அளிககப்பட்டு வந்தது. ஆனல் இப்பொது பாராளுமன்றத்து அங்கத்தவர்களுக்குத் தனித்தனி 600 ரூபாவும், மந்திரிமாருக்கு 1500 ரூபாவும் உதவ செனனுயக்க அரசாங்கம தீர்மானித்திருக்கிறது. இதனைவிட, மந்திரிமாரின உபசாணைச் செலவுக்கெனவும் 500 ரூபாமாதந்தோறும் உதவப்படுகிறது உதவிமந்திரிகளுக்கு மாதம்தோறும் 1000 ரூபா வேதனமாகக் கொடுக்கப்படுகிறது பாராளுமன்றத்தைக் கலந்து ஆலோசிக்காயல், இப்படி வேதனம் விதித்தமை பிழை: அந்த வேதன விகிதத்தைப் பின்வருமாறு குறைக்கவேண்டும் என்று காலிப் பிரதிநிதியான மிஸ்ரர் தகநாயக்கா ஓர் தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் எடுத்தாள இருக்கிருர்

உதவி மந்திரிமார் சப. : 750 00
மந்திரிமார்—உபசாணைச் செலவு இல்லை.
அங்கத்தவர்கள்சப்பளம்:500-00
பாராளுமன்ற உபதலைவா சமபளம்:- 750 00.

## வாய்ப்பூட்டா!

### தனி அங்கத்தவர்கள் பிரேரணை இல்லை

இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள்சபை,கூடுகிறது. கூட்டம் ஆரம்பமானதும், தேசாதிபதி தன் சொற்பொழிவைச் செய்வார். அதன்பின் அந்தச் சொற்பொழிவின்மீது விவாதம் நடக்கும்.

விவாதம் முடிந்ததும், அடுத்த வருட வரவுசெலவுத் திட்டம் ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளப்பட்டு, அதன்மீது விவாதம் நடைபெறும்.

இப்போதுள்ள ஏற்பாட்டின்படி அடுத்த ஆண்டு பெப்ரவரி வரைக்கும் தனி அங்கத்தவர்கள் ஏதும் பிரேரணைகளைப் பாராளுமனறத்தில் எடுத்தாள முடியாது.

இன்னும் செனேற்சபையில்உள்ள அங்கத்தவர்களுக்கோ, செனேற் தலைவர்க்கோ, உபதலைவர்க்கோ, மாத வேதனம் கொடுக்கக்கூடாதென்றும் மிஸ்ரர் தகநாயக்க தம் தீர்மானத்திற் கேட்பார்.

மிஸ்ரர் தகநாயக்காவின் தீர்மானத்தைப் பாராளுமன்றம் அங்கிகரித்து, அது சட்டபூர்வமாகி விடுமானல், இலங்கைக்கு இந்த ஓர் விஷயத்தில் மாத்திரம மாதந்தோறும 32,350 ரூபா மிச்சம்ஏற்படும் எனறு கணிக்கப்பட்டிருக்கிறது.

# சர்வாதிகாரத் தர்பார்

## தமிழரைப் புறக்கணித்தது சரியா?

வட்டுக்கோட்டை ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலைச் சொந்தக்காரரும, மலாய்நாட்டில் பல தோட்டங்களின் சொந்தக்காரருமாகிய ஸ்ரீ கே. நாகலிங்கம் அவர்களும், அவரது பாரியாரும் சென்றவாரம் ஷை வித்தியாசாலை மண்டபத்தில், பாராளுமன்றத்தில் தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகளா யிருப்பவர்களுக்கு ஓர் விருந்துபசாரம் நிகழ்த்தினர். கொண்டாட்டத்துக்கு யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலுமிருந்து பல பிரமுகர்கள் சமுகமளித்தனர்.

திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், ஈ. எம், வி. நாகநாதன், க. கனகரத்தினம் என்பவர்கள் இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைபற்றியும், அரசியல் ஆட்சிப்பொறுப்பைத் தம்மீது சுமத்திக் கொண்டுள்ள செனனுயக்காக்கோஷ்டி, இலங்கைச் சுதந்திர விஷயத்தில் எப்படிக் கருமம் ஆற்றுகிறது என்பதுபற்றியும் பேசினர். அவர்கள் பேசியதன் சாரம் வருமாறு:

"இன்று செனனுயக்காக் குழுவினர்க்கு நாட்டில் எவ்விதமான செல்வாக்கும இல்லை. அவர்கள் நாட்டின் உண்மைப் பிரதிநிதிகளுமல்ல. அப்படியிருக்கவும், அவர்கள் பிரிட்டிஷ் பிரதிநிதிகளின் உதவியுடன் இன்று ஆட்சிபுரிந்து கும்மாளம போடுகிருர்கள்.

"அரசியல் நிர்வாகத்திலே, யாழ்ப்பாண மக்கள் இன்று பங்கெடுக்கவில்லை. யாழ்ப்பாணமக்களைப் புறக்கணித்தே மிஸ்ரர் செனனுயக்கா இன்று அரசியலை நடாத்திவருகிருர். யாழ்ப்பாணமக்கள் ஏகோபித்துத் தெரிந்தனுப்பிய பிரதிநிதிகளைப் புறக்கணித்துவிட்டு, தானுேன்றித் தர்பார் நடாத்துவது இந்நாட்டின் [illegible] இந்நாட்டி[illegible] யாழ்ப்பாணமக்கள் ஆற்றிய சேவை, செய்த தியாகம் என்பவற்றை ஓர் சில சிங்களத் தலைவர்கள் மறந்து கருமம் ஆற்றுவது அவர்களின் எதிர்கால சுபீட்சத்துக்கோ, நாட்டின் வாழ்வுக்கோ நல்லஉபாதம் அல்ல"

செனனுயக்காக் கோஷ்டி யாழ்ப்பாணத்தவரைப் புறக்கணித்து மந்திரசபை யமைத்து அரசியல் நடாத்தப் புறப்பட்டதுபற்றிக் கூட்டத்திற் [illegible]தோர் பலரால் வெறுப்பும் [illegible]ர்ப்பும் தெரிவிக்கப்பட்டன வென்று நமது நிருபர் தெரிவிக்கிருர்.

# ஸ்ரீ பஞ்சாக்கர மகிமை

[ சைவமணி ]

( முற்றொடர் )

ஆதலால் வேத வடிவினராகிய சிவ பெருமானுக்கு யசுர்வேதம் சிவமாகவும், அவ்வேதத்தின் மத்தியிலுள்ள ஸ்ரீ ருததிரம் முகமாகவும், ருத்திரத்தின் மத்தியிலுள்ள ஸ்ரீ பஞ்சாக்கரம் நேத்திரமாகவும், ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் இடையிலுள்ள சிவ என்னும் அக்ஷரங்களிரண்டும் கண்மணியாகவும் இருத்தல் அறியப்படும். இதுபற்றியே சிவ நாமத்தால் ஸ்ரீ பஞ்சாக்கரமும், ஸ்ரீ பஞ்சாக்கரத்தால் ஸ்ரீ ருத்திரமும், ஸ்ரீ ருத்திரத்தால் யசுர்வேதமும், யசுர்வேதத்தால் ஏனைய வேதங்களும் விளக்கமுறும் என்பது பெறப்பட்டது. வேதோபப்பிருங்கணமாகிய புராணமும், "வித்தைகளெல்லாவற்றுள்ளும் வேதமே உத்கிருஷ்டமானது; அதனுள்ளும் உருத்திரை காதசினியே உத்கிருஷ்டமானது; அதனுள்ளும் பஞ்சாக்ஷரமே உத்கிருஷ்டமானது; அதனுள்ளும் சிவ என்னும் த்வயாக்ஷரங்களே உத்கிருஷ்டமானவை" என்று முறையிடுகின்றது.

பிருதிவி முதல் சிவதத்துவ மீறாகவுள்ள தத்துவங்கள் முப்பத்தாறின் இறுதியில் நிற்பது சிவதத்துவமாம். சிவதத்துவத்திற்குமேல் தத்துவமில்லை. அச் சிவதத்துவத்திலிருந்து மற்றெல்லாத் தத்துவங்களும் விரிந்து அதிலேயே ஒடுங்கும். ஆதலால் அச் சிவதத்துவததிற்குக் கர்த்தாவாயிருக்கும பரசிவப் பொருளின் மூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரததிற்கு மேற்பட்ட மந்திரம இல்லையென்பது துணியப்படும். இதனை,

மொய்த்த வோங்சிவ தத்துவ
மதனினு மேலாம்
தத்து வாந்தம மின்மைபோன்
மறைகளின் றலையாய்
வைத்த வைந்தெழுத் தாகிய
மந்திர மதனி
லுத்த மம்பெறு மந்திர
மிலையென நுணர்வாய்.

என்னும் சித்தாந்த சிகாமணியாலும் அறிக.

இம் மகாமந்திரத்திலுள்ள ஐந்து எழுத்துக்களும் முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களையும, சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்னும் பஞ்ச ஞானேந்திரியங்களையும் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்னும் பஞ்சகன்மேந்திரியங்களையும்; சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் பஞ்ச தன்மாத்திரைகளையும்; நிவிர்த்தி,பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்சகலைகளையும்; கன்மசாதாக்கியம், கர்த்துரு சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், சிவ சாதாக்கியம் என்னும் பஞ்ச சாதாக்கியங்களையும்; கிரியாசத்தி ஞானசத்தி,இச்சாசத்தி ஆதிசத்தி, பராசத்தி என்னும் பஞ்சசத்திகளையும்; சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம். தற்புருஷம்,ஈசானம் என்னும் பஞ்சப் பிரமங்களையும் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்னும் பஞ்சகர்த்தாக்களையும், சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிர்த்தியங்களையும்; அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்னும் பஞ்சவர்ணங்களையும்; வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்னும் பஞ்சபட்சிகளையும் தம்முள் அந்தர்ப்பவமாய்க் குறிப்பித்து விளக்கிக்கொண்டு சத்தார்த்தப் பிரபஞ்சங்களுக்கெல்லாம் பிரேரகநிலையாதாரமாயிருக்கும்.

பஞ்சாட்சரமானது, மோக்ஷசாதனத்திற்கு மூலமாயிருப்பது மன்றி, அவரவர் விருப்பத்தின்படி,தர்பனம் மோகனம், வசியம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், பேதனம், மாரணம் என்னும் அஷ்டகருமவித்தை முதலிய சித்திகளையுங் கொடுக்கும்.

இத் திருவைந்தெழுத்து சாதக அதிகாரிகளின் பக்குவ தாரதம்மியத்தின்படி சோபானக் கிரமததில் முறையே தூலம் சூக்குமம் காரணம் மகாகாரணம் முத்தி என்னும் ஐந்து வகையாய் விளங்கும். அன்றியும் முறையே தூலத்திற்றூலம், தூலத்திற் சூக்குமம், தூலத்திற் காரணம், தூலத்தில் மகாகாரணம், தூலத்தில் முத்தியெனவும்; சூக்குமத்திற் றூலம் சூக்குமத்திற் சூக்குமம், சூக்குமத்திற் காரணம், சூக்குமத்தில் மகாகாரணம், சூக்குமததில் முத்தியெனவும், காரணத்தில் தூலம், காரணத்திற் சூக்குமம், காரணத்திற் காரணம், காரணத்தின் மகாகாரணம், காரணத்தின் முத்தியெனவும் பதினைந்து வகையாகவிமிருக்கும். இவை அவரவாகள் தத்தம் அநுசந்தான வவசர சந்தர்ப்பங்களுக் கியைய ஆசிரியர் மூலமாய் அறிந்துகொள்ளற் பாலனவாம்.

ஸ்ரீ பஞ்சாக்கரமானது நகரத்தை முதலிலும யகரத்தை இறுதியிலும் வைத்துச் செபிக்கும்போது தூலபஞ்சாக்கரமெனப்படும். இது அவரவர்களின் சமயாசார கன்மாநுட்டானங்களுக்கு இன்றியமையாததாய்ச்சமயாசாரியராகிய காரிய குருவினலே யாவர்க்கும் முதலில்உபதேசிக்கப்படுவதாம். நகார மகாரங்களை இறுதியிலும், சிகார வகாரங்களை முதலிலும், யகாரத்தை இடையிலுங் கொண்டிருப்பது சூக்கும பஞ்சாக்கரமெனப்படும். இது தூலபஞ்சாக்கரத்தைநியமமாக வநுட்டித்துப் பக்குவமடைந்தவர்கட்கே மோக்ஷ சாதனையின் பொருட்டு ஞானசாரியராகியகாரண குருவினுல் உபதேசிக்கப்படுவதாம். சிகாரவகாரங்களிரண்டையும் முறை

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹூ
கார்த்திகை ௧௦௨ செவ்வாய்க்கிழமை

## வெள்ளரசு

அநுராசபுரத்துள்ள தொன்மையான தூய வெள்ளரசமரத்தின் வேரிலிருந்து ஒரு புதிய கிளை அங்குரித்து அக்கிளை எட்டடி வரையில் வளர்ந்துவிட்டதெனவும், அது பின்னர்ச் சில மெல்லிய கிளைகள் பொருந்தியதாகக் காணப்படுகிற தெனவும், இரண்டாயிர வருட காலமாக இத்தெய்வீக விருட்சத்தின்கண் இப்படியான அற்புதம் நிகழ்ந்ததில்லையெனவும், இலங்கை நாட்டின் நற்காலத்திற்கு இது ஒரு பெரும் அறிகுறியெனவும் இலங்கையிலுள்ள பௌத்தர்களனைவரும் மகிழ்ச்சியுறுகின்றனர்.

இந்த இலங்கைநாடு நன்மையடைதல் தீமை யடைதற்காகிய உற்பாதங்களை இத்தைவீகவிருட்சம் காட்டிவருவ தியல்பென்பது அநுபவத்திற் கண்டதென இங்குள்ள பௌத்த சமயிகள் சொல்கிறார்கள்; 1815ம் ஆண்டில் கண்டிநாட்டின் கடைசி யரசனாகிய ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கனைப் பிருத்தானியர் ஜெயித்துச் சிறைப்படுத்தி இந்நாட்டின் அரசியலைத் தாங்கள் கைப்பற்றிய போது, இத்தூய விருட்சத்தின் இலைகளிலே "முசுறு" கூடுகட்ட இவ்விருட்சம் பட்டொழியுமோ எனக் கண்டோர் பயப்படக் கூடிய நிலையிற் காணப்பட்டதாம்; பின்னர் இவ்வெள்ளரசுக் கோயிலுக்குரிய அதிகாரிகள் முசுறுகளைக் கூட்டோடு அகற்றி இவ் விருட்சத்தைப் பேணி வளர்த்தனராம். பின்னர் சென்ற 1915-ம் ஆண்டிலே அதாவது கண்டிச் சுதேசமன்னரின் ஆட்சிநீங்கி 100 வருடங் கழிந்தபின், சிங்கள இஸ்லாமிய கலகம் நேர்ந்தபோது இவ் வெள்ளரசமரம் தன் இலைகள் வாடிச் சருகுதிர்த்தவும், கொம்பர்கள் உலர்வடையவும் காணப்பட்டதாம்; அக் காலத்திலும் இவ்விருட்சத்திற்குப் பௌத்தர்கள் விசேஷ பூசை செய்தும், மங்கலமான பொருள்களைக் காணிக்கையாக இட்டும் வணக்கஞ்செய்து, அப்பெரும் ஆபத்தைத் தடுத்துவிட்டன ரெனச் சொல்லப்படுகின்றது. இலங்கைப் புதிய பாராளுமன்றப் பரிபாலனம் ஆரம்பமாகும் இந்தச் சமயத்திலே தைவிகம் வாய்ந்த இந்தப் பழைய விருட்சத்தின் வேரிலிருந்து புதியகிளை முளைத்து இனிது வளர்ந்து வருவது இந்நாட்டிற்கு இனிமேல் நன்மையுண்டாகு மென்பதற்கு ஒரு மங்கலமான அறிகுறியாகு மென்பதே இங்குள்ள சிங்கள மக்களின் கொள்கையாகும்;

அநுராசபுரத்திலுள்ள வெள்ளரச மரத்தினைப் பௌத்தர் மாத்திரமன்றி ஏனைய சமயத்தவர் சாதியினர் தேசத்தவரெல்லாம் பாராட்டுகிறார்கள்; இலங்கையிலுள்ள சைவ மக்களும் இவ்வெள்ளரச மரத்தைச் சமயபேதமின்றிப் பாராட்டி அதற்கு வணக்கஞ் செய்து வருகின்றார்கள்; காரணம் அதனிடத்துள்ள அருமை, தொன்மை, தெய்வத்தன்மை என்னுமிவைகளேயாம்; மேலும் சைவமக்கள் மரங்களிலும் சிவத்தைக்காணுந் தகைமையுள்ளவர்கள் 2500 வயசு கொண்ட ஒரு விருட்சம் உலகத்திற்காணப்படுதல் அருமை யென்பதுதான் உலக மக்களின் கொள்கை; இப் பெருவிருட்சம் போலவே, இந்தியாவிலுள்ள காஞ்சிமா முதலிய சில தல விருட்சங்களுக்குச் சைவ வைஷ்ணவ மக்கள் அருமை தொன்மை தெய்வத்தன்மை யென்னுமிவைகளுண் டெனப் பாராட்டிப் பேணி வருகிறார்கள்.

அநுராசபுரத்திலே யுள்ளதாகிய இந்தப் புராதன விருட்சத்தை, அப் பட்டினத்தில் வசிக்கும் சைவமக்களும் இலங்கையின் ஏனைய பாகங்களில் வசிக்குஞ் சைவமக்களும் விசேஷமாகப் பாராட்டிப் போற்றி வந்தமைக்குப் பிரதான காரணமொன் றுண்டு; வெள்ளரசுக் கோயிலுக்குப் போகும் வாசலிலே பெரிய விநாயகர் திருவுருவச் சிலையொன்று, பழைய காலந் தொடக்கமாக வைக்கப்பட் டிருந்தது; அக் கோயிலுக்குப்போவோர் முதல் அந்த விநாயக மூர்த்தியையே தரிசிப்பார்கள்; அவ் விநாயகரைப் பௌத்தர் மாத்திரமன்றி அப்பட்டினத்திலும் அயற் கிராமங்களிலுமுள்ள சைவமக்களும், அநுராதபுரத்திற்குப் போகும் சைவமக்க ளெல்லாரும் தரிசித்து வந்தார்கள்; வெள்ளரசுக் கோயிற் பிள்ளையா ரென்ற நாமமும் அவ் விநாயகருடைய சகஸ்திர நாமங்களு ளொன்றாகச் சேர்ந்தது; இதனால் அநுராசபுரத்துள்ள பௌத்தருக்குஞ் சைவருக்கும் பரம்பரை ஒற்றுமையும் நல்லெண்ணமும் நிகழ்தலாயின; ஆனால் இற்றைக்குப் பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர், இந்தப் பிள்ளையார் அந்தஇடத்தை விட்டு மறைந்துவிட்டார்; அக் காலத்தில் அநுராசபுரத்திற்குக் கருமார்த்தமாகச் சென்ற நாம் அங்குள்ள சைவநண்ப ரொருவரிடத்தில் அப்பிள்ளையாரின் மறைவைப்பற்றிக் கவலையோடு விசாரித்தபோது, வெள்ளரசுக் கோயிலுக்குப் புதியவராய் வந்த ஒரு பௌத்த குரு அப்பிள்ளையாரை அந்த இடத்திலிருந்து அகற்றுவித்து, சமீபத்திலே யுள்ளதாகிய புராதன பொருட் சேமிப்புச் சாலையுள் இடுவித்துவிட்டா ரென்றும், அன்று முதலாகத் தாங்கள் அந்த வெள்ளரசுக் கோவிலுக்குப் பிள்ளையாரைக் கும்பிடப் போவதில்லை யென்றும் கவலையோடு எமக்குச் சொன்னார்; இன்னமும் பிள்ளையார் பழையபடி வெள்ளரச மரத்தடியில் வந்திருந்தபாடில்லை; இப்பொழுது சிங்களவராகிய தாமும் தமிழர்களும் ஒத்துழைக்கவேண்டுமென்று [illegible] பிரதமர் [illegible] முதலி-யோர் இந்த விஷயத்தை ஆராய்ந்து ஆகவேண்டியவற்றைச் செய்வார்களா?

## சுயராஜ்யமா? இல்லையா?

இலங்கைக்கு இப்போது பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அளிக்கப்படவிருப்பது உண்மைச் சுயராஜ்யமா? அன்று? இந்தப் பிரச்சினை இன்று மிகவும் விவாதிக்கப்படுகின்றது. இது ஓர் போலிச் சுயராச்சியம், இச் "சுயராச்சியத்"துடன் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளினால் இலங்கை பிரிட்டனின் வாலில் தொங்கும் ஓர் நிலை ஏற்பட்டிருக்கிறதே யன்றித் தன் சுவாதீனத்தை நிலைநாட்டக்கூடியதாயில்லை என்றும், அன்று ஏலப்பளை முதலிய சிங்களப் பிரதானிகள் இலங்கையைப் பிரிட்டிஷார்க்குத் துரோகம் செய்தவாறு இன்று சேனநாயக்காக் கோஷ்டி, இலங்கையைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விற்றுவிட்டது என்றும் சமசமாஜிகள் சமதர்மிகள், தமிழ்க்காங்கிரஸ்வாதிகள் கூறுகின்றனர். இதற்கு நேர்விரோதமான அபிப்பிராயத்தை இன்று அரசியலை நிர்வகித்துவரும் ஐக்கியதேசியக் கட்சியினரும் அவர்களுடன் அநுதாபம் கொண்டவனையோரும் கூறுகின்றனர். இந்த இரண்டு சாராரும் தத்தம் கொள்கைகளை வாதிப்பதற்கும் ருசுப்படுத்தற்கும் இத்தவிதமான வாதப்பிரதிவாதங்களைக் கிளப்பி, பாமர மக்களைத் திணறவைக்கின்றனரே யன்றி, நிலைமையை உள்ள உள்ளவாறு மக்களுக்கு விளக்க முன்வரவில்லை.

இப்போது உலகம் உள்ள நிலையில் அதனோடு இலங்கை சம்பந்தப்பட்டவரையில், இந்நாட்டுக்கு வழங்கப்படவிருக்கும் அரசியல் மாற்றம் சாலச்சிறந்தது என்பதே எமது சித்தாந்தம். இந்நாட்டு மக்களின் பொருளாதார நிலையை, அந்நியர் தலையீடின்றித் திருத்தவோ, மாற்றியமைக்கவோ, முதன்முதலாக இந்நாட்டு மக்களுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வெளிநாட்டு வியவகாரம், ராணுவப் பாதுகாப்பு என்னும் விஷயங்களில், இலங்கை இங்கிலாந்துடன் உடன்படிக்கை செய்யமுன், இந்தியாவுடனும், தென்கிழக்கு ஆசியநாடுகளுடனும் இவ்விஷயமாகக் கலந்தாலோசித்திருந்தால் நன்மையாக இருந்திருக்கும், இலங்கையின் எதிர்காலம் தென்கிழக்கு ஆசியநாடுகளுடனேயே பிணிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்நாட்டின் பாதுகாப்பு, அந்நிய நாட்டுத் தொடர்பு எனனும் இன்னோரன்ன விஷயங்கள், தென்கிழக்கு ஆசியநாடுகளின் க்ஷேமத்துக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் விளைக்காத முறையில் வகுக்கப்படல் வேண்டும்.

இப்போது பிரிட்டனுடன் ஏற்பட்டுள்ள உடன்படிக்கைகளை நாம் நினைத்தநேரம் நிராகரிக்க முடியாது என்று இடதுசாரிகள் வியாக்கியானம் கூறுகின்றனர். அப்படி நிராகரிக்க முடியாது என்றோ நிராகரிக்கலாம் என்றோ, உடன்படிக்கையின் எந்தஇடத்திலாவது கூறப்படவில்லை அவற்றை நிராகரிப்பதும், மாற்றுவதும் இன்றைக்கு எழக்கூடிய பிரச்சினையல்ல, ஜனநாயகத்தின்கீழ் வாழும் இலங்கை மக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட எதிர்கால இலங்கையரசாங்கம், இந்த உடன்படிக்கைகளை நிராகரிக்கவேண்டும் என்று ஒரே மனத்துடன் கேட்டால் அந்தக் கேள்வியைப் புறக்கணிக்க, பிரிட்டனல்ல, வேறெந்த வல்லரசாலும் முடியாது. எமக்களிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தைத் தக்கவாறு பயன்படுத்திக்கொண்டு எம் [illegible] பலப்படுத்த [illegible] நாட்டிலே பஞ்சம் பசி பட்டினி என்பவற்றைப் போக்க வேண்டும். அந்நியப் பொருள்களை எதிர்பார்த்தலின்றி எமக்கு வேண்டிய சகல பொருள்களையும் இங்கே ஆக்கிக்கொள்ளல்வேண்டும். எம் வித்தியாசாலைகள் கேவலம் "கிளார்க்" மாரை உற்பத்தியாக்கும் யந்திரசாலைகளாயிராமல், கைத்தொழில் நிபுணர்களை, விவசாயவல்லுநரை, விஞ்ஞான ஆராய்ச்சியாளரை, கலைவாணரைச் சிருஷ்டிக்கும் ஸ்தாபனங்களாக மிளிரவேண்டும். நாட்டில் உள்ள ஒவ்வொரு ஆடவனும், ஒவ்வொருபெண்மணியும் "மானமது நீங்கில் கவரிமானனைய வீரர்" என்றபடி யுத்தம் நேர்ந்தால் யுத்தகளத்தில் தம உயிரையே தியாகம செய்யக்கூடிய விதமாக நாட்டுப் பற்றும், இராணுவப் பயிற்சியும அளித்தல்வேண்டும. இப்போது அளிக்கப்படவிருக்கும திட்டத்தில் சில நூந அம்சங்கள் இருக்கலாம. அவற்றைத் திருத்த முயற்சி செய்யவேண்டும; நாட்டு மக்களை நல்வழியிற் செலுத்த வேண்டுமேயன்றி பயன்றராப் பிரசாரங்களில் தலைவர்கள் ஈடுபடுவது உசிதமல்ல.

---

## சைவப் பிரசங்கம்

நுண்ணிய உணர்வும் திண்ணிய அறிவும படைத்த திரு. கண்ணனடிகள் இவ் வண்ணைநகரிலே சைவ பரிபாலன சபையின் ஆதரவிற் பண்ணிய புண்ணியத்தரும் பிரசங்கங்கள் ஐந்தாகும்; இப் பிரசங்கங்கள் எண்ணரிய சிறப்போடு கூடியனவாதலின் இவ்வண்ணார்பண்ணையிலும் அயலூர்களிலுமுள்ள ஆண்பாலார் பெண்பாலாராகிய சைவமக்களும் இருபாற்பட்ட மாணாக்கரும் வந்து உவந்து இச்சிறந்த பிரசங்கங்களை ஆர்வத்தோடு கேட்டுப் பயனடைவாராயினர். இந்த ஐந்து பிரசங்கங்களுள்ளும் சென்ற இரவு (யாழ்ப்பாணம் இந்துகல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில்) நமது கண்ணனடிகள் "சைவசமயமும் திருமூலரும்" என்னும் விஷயமாகச் செய்த உபந்நியாசமே சாலச் சிறந்ததெனல் மிகையாகாது; எடுத்துக்கொண்ட விஷயம் சைவசித்தாந்த சம்பந்தம்பற்றியதாதலின், அதனைச் சாமானிய மக்களுக்கும் சிறுவர் சிறுமியர்க்கும் எடுத்துப் புலப்படுத்துவது இலகுவான கருமமன் றெனினும், இப் பிரசாரகர் இவ்விஷயத்தை இலகுவான முறையிலே, கற்றாரும் மற்றாரும் உணரும் வண்ணம் புலப்படுத்தியுள்ளா ரெனலாம்; இது பிரசாரகரின் வாக்கு வன்மையையும் சொற்சித்திரத்தையும் பொறுத்ததாகும்; திரு. கண்ணனடிகள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினமாகிய நிகழும் கார்த்திகை மாசம் 19 உ (4-12 47) வியாழக்கிழமை 'நாவலர் காட்டிய நன்னெறி'' என்னும் பொருள்பற்றி ஒரு பிரசங்கஞ் செய்வதாக வாக்களித்துள்ளார். நேற்றிரவு நிகழ்ந்த பிரசங்கப் பூர்த்தியில், அரிய பிரசங்கங்களை இனிது கேட்டு வந்த அன்பர்கள் சார்பாகவும் யாழ்ப்பாணஞ் சைவபரிபாலனசபையின் சார்பாகவும் இப்பத்திரிகையின் ஆசிரியர் மூலம் திரு. கண்ணனடிகட்கு ஒரு நிதிமுடிப்பு வழங்கி நன்றியறிதலும் பாராட்டப்பட்டது.

---

## அறிவித்தல்

வண்ணார்பண்ணை மத்திய ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. 10—12—47க்கு முன் விண்ணப்பப்பத்திரம் கீழ்க் குறிப்பிடும் விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். சம்பளம் தகுதிக்கும் அநுபவத்திற்கும் தக்கதாகக் கொடுக்கப்படும். மற்ற விபரங்களை நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ கீழே குறிப்பிட்ட விலாசத்தாரிடம் அறிந்து கொள்ளலாம்.

இங்ஙனம்,
வே சுப்பிரமணியம்
ஷை பண்டகசாலைக் காரியதரிசி.

விலாச :
வே சுப்பிரமணியம்.
பண்டகசாலைக் காரியதரிசி No. 4
பிரப்பங்குளம்றோட்,
வண்ணார்பண்ணை,

Mis 191 25, 28—11—47.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொல்லாத ஆபத்தான யோசனை

## திரு. செல்வநாயகத்தின் பிந்திய கூற்று

### கண்ணிருந்தும் கிணற்றில் விழ்வதா?

[நமது அரசியல் நிருபர் எழுதுகிறர்]

இற்றைக்குச் சின்னுட்களுக்கு முன் யாழ்ப்பாண முற்றவெளியில் நிகழ்ந்த தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்திலும், அதற்குப்பின் திருக்கோணமலையில் நிகழ்ந்த தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்திலும் ஷை காங்கிரஸ் ஸ்தாபனத்தின் உபதலைவரும், காங்கேசன்துறைப் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பவருமாகிய ஸ்ரீ எஸ் ஜே. வி. செல்வநாயகம், தமிழ்மக்கள் முன் பின் எதிர்பார்த்திராத ஓர் "வெடிகுண்டைப்" போட்டு விட்டார். இந்த இலங்கையிலே, சிங்களர்க்கு எவ்வளவு உரிமைகள் உளவோ, அவ்வளவு உரிமைகள் தமிழர்க்கும் ஏனைய சிறுபான்மையினர்க்கும் உண்டு என்பதை ஸ்ரீ செல்வநாயகம் எடுத்துக்காட்டி, அந்த உரிமைகளைத் தமிழர்க்கும் ஏனைய சிறுபான்மையினர்க்கும் நல்காவிட்டால், தமிழ் மக்கள் உறையும் பாகங்களாகிய வடமாகாணமும், கிழ்மாகாணமும் இந்தியாவுடன்-சென்னைமாகாணத்துடன் சேர்ந்துவிடும் என்று குறிப்பிட்டிருக்கிறர்.

●

### நல்லகனியிற் புழு

திரு செல்வநாயகம் படித்தமனுஷன்; சிறந்தநியாயவாதி; பொறுப்பையுணர்ந்து பேசவேண்டியவர்; அப்படிப்பட்டவரது இக்கூற்றுநன்மைவிளைக்குமா அல்லது தீமை விளைக்குமா என்பது நாம் சிந்திக்கவேண்டியது. சுருங்கச் சொல்லுங்கால், பட்டவர்த்தனமாகத் தெரிவிக்குங்கால், ஸ்ரீ செல்வநாயகம், தன்னுடைய அந்த ஓர் கூற்றினுல், இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு, முன் எந்த இலங்கைத் தமிழ் மகனுவது செய்யாத செய்ய எண்ணுத தீமையை விளைத்துவிட்டார் என்றே நான் கூறவேண்டியிருக்கிறது. 2000 வருஷங்களுக்கு மேலாக, இந்தச் சின்னஞ்சிறு இலங்கையில் சிங்களர், தமிழர் என்னும் இரு சாகியத்தாரும் பாலுந் தேனும் போல வாழ்ந்து வருகிறர்கள். நல்ல கனிரசத்தில் புழுவிழுவதுபோல, இடையிடையே வகுப்புவாத விஷமிகள் தோற்றி, தம் சுயநலத்தைப் பூர்த்திசெய்தற்காக, வகுப்புத் துவேஷத்தை யுண்டாக்கி வந்தபோதிலும், இந்த இரு சமூகத்தாரும் நாளிதுவரை தம் அந்நியோந்நிய நேசபான்மையையோ, தொடர்பையோ விட்டிலர்.

●

### சாதனங்கள் உண்டா?

திரு. செல்வநாயகம் கூறுகிறபடி வடமாகாணத்தையும், கிழ்மாகாணத்தையும் பிரித்து அவற்றை ஓர் சுதந்திரத் தனி மாகாணமாக்கி, பின் அதனை இந்திய சமஷ்டியுடன் சேர்ப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அப்படிச் செய்தால், இந்த இரண்டு மாகாணங்களும் தனித்தியங்கும் சக்தி பெற்றிருக்கின்றனவா? இவற்றின் பொருளாதார வருமானம் இதன் சாதாரண நிருவாகத்தை நடாத்தப் போதுமானதா? இந்தஇரண்டு மாகாணத்திலும் உள்ள ஏற்றுமதிப் பொருள்கள் எவை? அவற்றை ஏற்றுமதி செய்தால் கிடைக்கக்கூடிய வருமானம் எவ்வளவு? இதுவரை வடமாகாணத்தின் செல்வம் எதனுல் வந்தது? இங்கே இயற்கை வளம் இல்லை. ஆறில்லாவூருக்கு அழகுபாழ் என்றங்கு நீர்வளம் இல்லாமையினுல் இந்நாடு செழிப்பற்று இருக்கிறது. மக்கள் தங்கள் ஊக்கத்தால், தளரா முயற்சியால், பிறவிடங்கள் சென்று, அங்கே வாணிபத்திலும், அரசாங்க சேவையிலும் ஈடுபட்டு இங்கே பொருள் அனுப்பி இந்நாட்டின் பொருளாதார நிலையை ஓரளவுக்கு வைத்திருக்கிறர்கள். தென் இலங்கையிலிருந்து, வடபாகத்தைத் துண்டாடிவிட்டால், இங்குள்ள மக்கள் எங்கே போய்ப் பிழைப்பது? எங்கேபோய் உத்தியோகம் பார்ப்பது? இங்குள்ளார் அனைவர்க்கும் பிழைப்பைக் கொடுக்க இங்கே வேண்டிய சாதனங்கள் உண்டா?

●

### அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டாள்

இந்தியாவிலே, சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டிபோல, ஜின்னு சாய்பு பாகிஸ்தான் கேட்டுப் பெற்றர். அப்படிப் பெற்றதால் கிடைத்த பயன் என்ன? ஜின்னுசாய்பு கவர்னர் ஜெனரல் ஆனுர்; அவருடன் சேர்ந்த லீக் தலைவர்கள் பாகிஸ்தானிலே உயர்ந்த பல உத்தியோகங்களைப் பெற்றனர். அவ்வளவுதான் கண்ட நன்மை பாகிஸ்தான் கிடைத்ததன் பயனுக. 4½ கோடி முஸ்லீம்கள், இன்று இந்தியாவிலே, தாம் பிறந்து வளர்ந்து, நேற்றுவரை தம் தாயகம் என்றிருந்த இந்தியாவிலே—கேவலம் அந்நியர் போல அவமதிக்கப்படுகிறர்கள். அவர்கள்மீது அரசாங்கத்துக்கு நம்பிக்கையில்லை; நேற்றுவரை சகோதரர்போல ஊடாடிவந்த பொதுஜனங்களுக்கு விசுவாசமில்லை. "இப்படித்தான் செய்வோம்; விருப்பமில்லாவிட்டால் பாகிஸ்தானுக்குப் போ" என்று இந்த ஏழை முஸ்லீம்களுக்குச் சொல்லப்படுகிறதை மறைப்பதற்கில்லை. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட பாவைபோல, இந்திய முஸ்லீம்கள் இன்று படும் அவமானம், கஷ்டங்களை எம் கண்ணுரக் கண்டபின்னரும் காதாரக் கேட்டபின்னரும், இங்கேயும் பாகிஸ்தான் பல்லவி பாடினுல், அப்படிப் பாடுபவர்க்கு ஒன்றில் மூளைக்கோளாறு ஏற்பட்டிருக்கிறது அல்லது வடிகட்டின சுயநலப்புலி என்றேநான் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கவேண்டியிருக்கிறது.

●

### ஸ்விட்ஸர்லந்தின் உதாரணம்

ஸ்விட்ஸர்லாந்தை, இலங்கையுடன் ஒப்பிட்டு, அங்குள்ள சிறுபான்மையினர், சுதந்திர இராச்சியங்கள் அமைத்துக்கொள்ளவில்லையா என்று திரு. செல்வநாயகம் போல்வார் கேட்கின்றனர். ஸ்விட்ஸர்லாந்து, இலங்கையிலும் பார்க்கச் சிறிய நாடுதான்; அதன் விஸ்தீரணம் 16 000 சதுரமைல்தான்; இலங்கையின் விஸ்தீரணம் 25,332 மைல் என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனல், ஸ்விட்ஸர்லாந்தின் தன்மையையும் இலங்கையின் அமைப்பையும், விஸ்தீரணஅளவில் ஒப்பிடு நோக்குமுன், பொருளாதார விஷயமாக ஒப்பிட்டுநோக்கவேண்டும். ஸ்விட்ஸர்லாந்தின் செல்வம்-நிலச்செல்வம், தொழிற்செல்வம் முழுதும், எல்லாப் பாகங்களிலும் சமமாகச் செறிந்திருக்கிறது. இலங்கையிலும் அப்படியா? இப்போது இலங்கையின் பொருள்வருவாய்களாம் ரப்பர், தேயிலை, தேங்காய் என்பவற்றில் ரபர் தேயிலை என்பன வடமாகாணத்திலோ, கிழ்மாகாணத்திலோ உண்டா? வடபாகமும் கிழ்ப்பாகமும் நிலவளம், தொழில்வளம் இன்றிக் கிடப்ப, தென்பாகமே இவற்ருல் மிதமிஞ்சியுள்ளது என்பதை திரு செல்வநாயகம் போன்றேர் முதலில் அறிந்து, பின் ஸ்விட்ஸர்லாந்தின் விஷயத்தை ஒப்பிட்டு நோக்கவேண்டும்.

●

### இந்தியர் அபிப்பிராயமென்ன?

திரு.செல்வநாயகத்தின் ஆலோசனைக்கு இந்திய மக்களின் ஆதரவுதான் உண்டா? பெரிய பாரதகண்டத்தைப் பிரிவினை செய்யக்கூடாது என்று வாதாடிய பாரதமக்கள், இன்று பாலஸ்தீனத்தைப் பிரிவினை செய்யக்கூடாது என்று ஐக்கியதேசஸ்தாபனத்தில் போராடும் இந்திய மக்கள் சின்னஞ்சிறு இலங்கையைப் பிரிவினை செய்ய உடன்படுவார்களா? இவ்விஷயமாகச் சமீபகாலத்தில் இங்கு விஜயம்செய்த பேராசிரியர் த. பொ. மீனுட்சிசுந்தரம்பிள்ளை சென்னையில் சுகாதார மந்திரியாயிருந்த பிரபல காங்கிரஸ்வாதி ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதி என்பவர்கள் பட்டவர்த்தனமாகத்தம் அபிப்பிராயத்தைக் கூறியுள்ளனர். திரு. செல்வநாயகத்தின் [illegible] னது என்று அவர்கள் கூறியதை [illegible] டிதர் நேரு, மகாத்மாகாந்தி, சர்தார் படேல் முதலாம் தேசிய சிரோமணிகள் ஆதரிப்பர் அன்றிக் குறுகியமனப்பான்மை கொண்டு பிரிவினைக்கு ஓர்போதும்சாதகமாயிருக்கமாட்டார்கள் என்பதை நிதமாக நம்பலாகும். இலங்கையில் இந்திய மக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிவிம்பித்துக் காட்டும் வீரகேசரிப் பத்திரிகை இவ்விஷயமாகக் கூறுவதும் குறிப்பிடத்தக்கது. அது சென்ற வெள்ளிக்கிழமைத் தினசரியில் தன் ஆசிரியர் கூற்ருகப் பின்வருமாறு கூறுகிறது:

"சமீபத்தில் இந்தியவுக்கு வந்திருந்த பேராசிரியர் மீனுட்சி சுந்தரனரும் மாஜி மந்திரி ஸ்ரீமதி ருக்மணி லட்சுமிபதியும் இந்த யோசனையைப் பிரஸ்தாபித்து, இதைக் கண்டித்தும் கூறினர். பிரிவினைக்குட்பின் இந்தியாவில் நடக்கும் அமளிகளைக்கண்டு ஒவ்வொரு இந்தியனும் வெட்கித் தலைகுனியவேண்டும். அண்ணன் தம்பிகள்போல் ஒற்றுமையாகவும் சௌஜன்யமாகவும் தலைமுறை தத்துவமாக வாழ்ந்துவந்த இந்துக்களும் முஸ்லிம்களும் இன்று ஒருவருக்கொருவர் விரோதிகள் என நினைக்கின்றனர். நாட்டைப் பிரித்துவிட்டால், இந்தியாவில் சமூகப் பிரச்னை தீர்ந்துவிடுமென்று சொல்லப்பட்டது. ஆனல் பிரிவினைக்குப்பின்போ, நிலைமை பெரிதும் மோசமாகி, இனியும் என்ன நடக்குமோ என்று அஞ்சும்படியான நிலைமை ஏற்பட்டுள்ளது. பக்கத்திலுள்ள இந்தியாவைக் கண்டபின்பும் இங்கு ஆபத்தான பிரிவினை யோசனையை யாராவது கூறுவாராயின் அவர்கள் ஏதோ பெரிய மனப்பிராந்தி கொண்டவர்களாகவே இருக்கவேண்டும்.

"இலங்கையை இரண்டாக்கி ஒருபகுதியை இந்தியாவுடன் இணைக்கவேண்டுமென்ற யோசனையை, இந்தியாவில் பொறுப்பான எந்தத் தலைவர்களும் ஆதரிக்கமாட்டார்கள். சமீபத்தில் இலங்கை வந்திருந்த இந்தியத் தலைவர்கள் கூறியதே இதற்குத் தக்கசாட்சி. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நட்புறவு நிலவவேண்டுமென்ற எண்ணமுள்ளவர்கள் இத்தகைய விபரீதமான யோசனைகளைச் செவி கொடுத்தும் கேட்கமாட்டார்கள். சின்னஞ் சிறிய இலங்கையிலே சிங்களவரும் தமிழரும் மற்றும் பல சமூகத்தாரும் பலகாலமாகச் சேர்ந்து வாழ்ந்து வருகிறர்கள். சிறுபான்மையோராகிய தமிழர்கள் வடமாகாணம், கிழக்குமாகாணம் மட்டுமல்லாமல், தீவின் பலபாகங்களிலும் அமைதியாகவசித்துவருகிறர்கள். நாட்டைப் பிளப்பதாயின், சிறுபான்மையோர் கதி பாகிஸ்தானில் இந்துக்களும், வட இந்தியாவில் முஸ்லீம்களும், இன்று என்ன பாடுபடுகிறர்களோ அவ்விதமே முடியும் இத்தத் தீர்கொலை யோசனைக்கு அறிவுள்ள யாரும் அரைக்கணமும் ஒப்பமாட்டார்கள்."

## இலங்கையின் பாதுகாப்பு

### ஐ. நா. ஸ்தாபனத்தின் பொறுப்பாம்

இலங்கை சுதந்திரம் பெற்றுல், அதன் பாதுகாப்புக்கு இங்கிலாந்தை நம்பியிருக்கவேண்டியதில்லை. இலங்கை சுதந்திரம் பெற்றவுடன், ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்க முடியும். அதன் பயனுக உலகசமாதானத்தை நிலைநாட்டும் பொறுப்பை மேற்கொண்ட மேற்படி ஸ்தாபனம் இலங்கையின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கும்.

என்றிவ்வாறு இலங்கைச் சமதர்மக்கட்சியின் காரியதரிசியும், பாராளுமன்றத்து அங்கத்தவருமான மிஸ்ர் பீற்றர் கெனமன் சென்றவாரம் கொழும்பு கால்பேஸ் மைதானத்தில் நிகழ்ந்த பகிரங்கக் கூட்டமொன்றில் தெரிவித்தனர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இப்போதுள்ள உலக நிலைமையில் பெரிய நாடுகள்சரி, சிறிய நாடுகள்சரி, அவை பரஸ்பரம் உதவிசெய்தேயாக வேண்டும். எல்லாத் தேசங்களும் ஒன்று சேர்ந்து உலக சமாதானத்தை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஏற்பட்டிருக்கிறது. இலங்கை இதிற் சேர்ந்தவுடன் அந்த ஸ்தாபனத்திலுள்ள மற்றும் நாடுகளுக்குள்ள பாதுகாப்பு அதற்கும் கிடைக்கும் ஆகவே, இங்கிலாந்தின் பாதுகாப்பு எமக்கு எதற்கு?

"இதுவரை இலங்கையாகிய எமது சம்மதமின்றி, பிரிட்டிஷார், இங்கே தமது ராணுவத்தை வைத்திருந்தனர். ஆனல், இப்போது ஏற்பட்டுள்ள உடன்படிக்கையினுல், எங்கள் "அநுமதியுடனேயே" தம் இராணுவத்தை இங்கே வைத்திருப்பாராம்! அவர்களுடைய குமமானத்துக்கு இங்கேயுள்ள கறுத்த முதலாளிமார் உதவி புரிவர்!

# "யுத்த" ஆரம்பம்

## டக்ரர் பேரீராவின் அறிவித்தல்

வருகிற ஜனவரி மாதம் 1?-ம் திகதி கூடும் பாராளுமன்றக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களைத் தாம் எடுத்தாளப்போவதாக, சமசமாஜக் கட்சித் தலைவர் டக்ரர் என். எம். பெரீரா அறிவித்தல் கொடுப்பர்:

(1) பொதுஜன பாதுகாப்புச் சட்டம் உடனே தவிர்க்கப்படல்வேண்டும்.

(2) பொலிஸ்புகுதித் திருத்தச் சட்டம் உடனே நீக்கப்படல் வேண்டும்.

(3) இலங்கையில் உள்ள பஸ் போக்குவரத்துச் சாதனங்கள் யாவும் அரசாங்கத்தாலேயே எடுத்து நடத்தப்பட வேண்டும். அப்படி எடுத்து நடத்தும்போது, பஸ் முதலாளிமார்க்கு எத்தவிதமான நஷ்ட ஈடும் கொடுக்கவொண்ணுது. பஸ் போக்குவரத்தை, புகைரதப் பிரயாண வசதிகளுடன் இணங்க அமைத்து நடத்தல்வேண்டும்

(4) இலங்கையில் உள்ள ஒத்தொழிலாளிமாவது தினத்தோறும் 8 மணித்தியாலங்களுக்கு மேலும், கிழமையில் 40 மணித்தியாலங்களுக்கு மேலும் வேலைவாங்கக்கூடாது என்ற சட்டம் பிறப்பிக்க வேண்டும்.

(5 பாராளுமன்றத்தைக்கலந்துஆலோசித்து ஓர் முடிவு செய்யாமல், இந்நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகள் எவரும், வேறு அரசாங்கங்களுடன் வர்த்தகம் சம்பந்தமான, ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தமான உடன்படிக்கைகள் எதுவுஞ்செய்யவொண்ணுது

(6) இத்தேசத்தின் பரிபாலனம் முழுவதும் இலங்கையில் தாய்ப் பாஷைகளான தமிழிலும் சிங்களத்திலுமே செய்யப்படவேண்டும்.

(7) இலங்கையில் வதியும் எல்லாத்தொழிலாளிகளுக்கும் அவர்களின் ஜீவியத்துக்குப் போதுமான ஓர் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்படல் வேண்டும்

(8) இலங்கையில் உள்ள சகல அரசாங்க உத்தியோகத்தர்க்கும் பூரணதொழிற்சங்க உரிமைகளும் அரசியலிற் பங்குபற்ற உரிமைகளும் இருத்தல்வேண்டும்.

(9) 500 ஏக்கருக்கு மேற்பட்ட தோட்டங்களையெல்லாம் அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்காமல் ஸ்வீகரித்து, அவற்றை அரசாங்கத்தின் பொறுப்பில் நடாத்தவேண்டும்.

(10) இலங்கையில் உள்ள சகல வங்கி ஸ்தாபனங்களையும் வீமாக் கம்பனிகளையும் அவற்றுக்கு எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்காமல் ஸ்வீகரித்து அரசாங்கமே நடாத்த வேண்டும்

(11) அந்நியநாட்டு வர்த்தகம், ஏற்றுமதி இறக்குமதி யாவும் அரசாங்கத்தால் செய்யப்படவேண்டுமன்றி தனி வர்த்தகராலோ, வேறும்சமூதாயங்களாலோ செய்யப்படவொண்ணுது.

(12) "சிவில் டிபென்ஸ்" எனப்படும் ஊர்ப் பாதுகாப்புப் பகுதி ஆரம்பமான நாள் தொடக்கம் அதன் அதிகாரியான "ஸிவில் டிபென்ஸ் கமிஷனர்" செய்த செலவுகளைப்பற்றி நாடெங்கும் விசாரித்து அவகாசிக்கவும் தோற்றியிருக்கின்றன. இந்தப் பகுதியால் இலங்கைக்குஇதுவரை எவ்வளவு செலவு ஏற்பட்டிருக்கிறது? இலங்கையின் பொருளாதாரத்தை முன்னிட்டு இச்செலவுகள் சிக்கன முறையிற் செய்யப்பட்டிருக்கின்றனவா? தேவையற்ற விதத்தில் இவர்களினம் "ஸிவில் டிபென்ஸ் கொமிஷனர்"ரால் வீண் விரயம் செய்யப்பட்டிருக்கிறதா? செய்யப்பட்ட செலவுகள் யாவற்றுக்கும் அரசாங்கசபை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் உறவு வளர

## கோடிக்கரையைத் திறக்கவேண்டும்

[சென்னையில் பிரசுரமாகும் "லோகோபகாரி" பின்வருமாறு எழுதுகிறது ]

தஞ்சாவூர் ஜில்லாவில் வேதாரண்யத்தை அடுதத கோடிக்கரைக்கும், யாழ்ப்பாணத்திலுள்ள காங்கேயன்துறைக்கும் இடையில் அந்தக்காலத்தில் கப்பற் போக்குவரவு நடந்துவந்தது. இரண்டு துறைமுகத்துக்கும் இடையில சுமார் முப்பது மைல் தூரந்தான். கப்பற்செலவு கால் ரூபாய் முதல் ஒரு ரூபாய்வரை இருந்தது. யாத்திரை மூன்றுமணி நேரததில் முடிந்தது. இது சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முந்திய கதை. ஆனல் அன்னியர் ஆட்சியில் தென் இந்திய இருப்புப்பாதைக்கு லாபம் கிடைப்பதற்காக இந்தக் கப்பற் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அப்பொழுது வேதாரண்யத்திலிருந்து ஒரு ரூபா செலவில் சுமார் மூன்றுமணி நேரத்தில யாழ்ப்பாணம் சென்றவர்கள் இப்பொழுது சுமார் பத்து ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் இரண்டுநாளில்தான் யாழ்ப்பாணம்போக முடியும். மண்டபத்தில் வைத்திய சோதனைக்காக மூன்று நாள் தங்க நேரிட்டால் சரியாக ஐந்து நாள் ஆகும். செலவும்கூடப் பத்துரூபாய் ஆகும். வேதாரண்யத்திலிருந்து தனுஷ்கோடிவரை ரயிலில் போய் அங்கிருந்து சப்பலில் தலைமன்னர் போய், அங்கிருந்து திரும்பவும் ரயிலேறி யாழ்ப்பாணம் செல்லவேண்டும்.

இந்தத் தொல்லைகளெல்லாம் நீங்குமாறு திரும்பவும் கோடிக்கரையைத் திறக்குமாறு சென்னை அரசாங்கத்தார் முயன்று வருகிருர்கள். இந்தியா அரசாங்கத்தார் இதற்குப் பலவிததடைகள் சொல்லி வருகின்றார்கள். ஆயினும், சென்னை அரசாங்கத்தார் தளராதமுயற்சிசெய்து இந்த வழியை விரைவில் திறந்துவிட வேண்டும். இதனல் இலங்கை இந்தியத் தொடர்பு பலப்படுவதுடன், யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்குமுள்ள உறவு வளர்வதற்கும் வழி ஏறபடும்.

## விலகினர்

"செனேற்" சபைக்குத் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டு பின் கல்வி உபமந்திரியாக நியமிக்கப்பட்ட டக்டர். வீ. ஆர். ஷொக்மன் சுகவீனம் காரணமாகத் தம்பதவியைவிட்டு விலகப் போவதாக அறிவித்துவிட்டார்

## ஓர் வியாக்கியானம்

### பிரிட்டிஷ் மந்திரி நிலைமையை விளக்குகிருர்

இலங்கைச் சுதந்திர மசோதா சென்ற வியாழக்கிழமை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இரண்டாம் முறையாக நிறைவேறிவிட்டது. அதனை எடுத்தாண்ட குடியேற்றநாட்டு மந்திரி மிஸ்டர் கிறீச் ஜோன்ஸ் பின்வருமாறு கூறினர் என்று கொழும்பு ஒப்சேவர் பத்திரிகையின் லண்டன் நிருபர் தெரிவிக்கிருர்:—

'யாரையும் கேட்காமலே, தனது இப்போதைய அரசியல் திட்டத்தை மாற்றுதற்கு இலங்கை பூரண அதிகாரம் பெற்றிருக்கிறது. இந்த அதிகாரம் ஓர்சில டொமினியன்களுக்குத்தான் உண்டு".

இலங்கையின் டொமினியன் அந்தஸது ஓர் போலிச் சுயராச்சியம் என்றும் அது இங்கிலாந்து கூறுகிறபடியே நடக்க வேண்டுமெனவும் கூறுவோர்க்கு உத்தரமாகவே குடியேற்றநாட்டு மந்திரியால் இவ் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறதாம்.

குடியேற்றநாட்டு மந்திரியின் வியாக்கியானத்தின்படி, இலங்கை பூரண சுயராச்சியம் பெறும் எனவும் இங்கிலாந்து இலங்கை என்னும் இருநாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை நாளைக்கு வேண்டுமானலும் நிராகரிக்க இலங்கைக்கு அதிகாரமுண்டெனவும் ஐ. தே. க. கொள்கையாளர் கூறுகின்றனர்.

உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

*

அப்படியானல்
**இந்துசாதனத்தில்**
விளம்பரஞ் செய்யுங்கள்

## யுத்த ஆரம்பம்

3ம் பக்கத் தொடர்ச்சி

யின் அநுமதி கிடைத்துள்ளதா? செய்யப்பட்ட செலவுகளைத தக்க கணக்குப் பரிசோதனையதிகாரிகள் பரிசோதித்தனரா? என்னும் இன்னோரன்ன விஷயங்களைப் பற்றி விசாரணைபுரிய ஓர்தக்க விசாரணைச் சபை நியமிக்கப்படல்வேண்டும்."

# வீண் செலவு

திரு. சே வே. ஐம்புலிங்கம்பிள்ளை

காலம் பொருள் முதலியவற்றைவீணே செலவு செய்தல் புத்தியன்று. காலம் வீணே கழிக்கப்பட்டால் பின்னர் வாராது. நமது இந்தியருட் பலர் தங்கள்பொழுதை வீணே போக்குவதனலன்றோ இந்தியநாடு இப்போது எல்லா விதத்திலும் துன்பப்பட நேர்ந்தது. ஆரியஆட்சியின் கீழ்ப்பட்டிருந்த இந்தியர்கள் கைத்தொழில் பயிர்த்தொழில் வியாபாரம் முதலியவற்றை விடுத்து மேலைத்தேச நாகரிக வசத்தினராய் சுகமாகக் காலங்கழிக்க முற்பட்டனர். பயிர்த்தொழில் கைத்தொழில் முதலியனவற்றைவிட்டு உத்தியோகத்திற் புகுந்தனர். கிராமத்திலுள்ள தொழிலாளிகள் பட்டினங்களுக்குச் சென்று அங்கே சுகமான வேலைகளைச் செய்து சீவிக்கலாயினர்.

அரிசி குத்துதல், மாவிடித்தல், சிகைக்காய்கூட்டு முதலியன அரைத்தல ஆகிய இவைகள்தாமும் இப்போது விடப்பட்டன. இவற்றை யெல்லாம் செய்வதற்கு இப்போது யந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. இன்னுஞ் சில ஆண்டுகளில் அம்மி உரல் முதலியன பழையகாலத்துப் பொருளாகிவிடும். கூலியாட்கள் தொழிலாளிகள் முதலியோர் தொழிற்சாலைக்கும் மற்றைய கிராமங்களுக்கும் நடந்து செல்வார்கள். இப்போது சிறிதுதூரஞ் செல்வதற்குத்தானும் வண்டி தேடுகிருர்கள். வண்டிகளுக்காக காக்கவேண்டிய நேரத்தில் அவர்கள் குறித்த இடத்திற்கு நடந்து செல்லலாம். இதை நோக்குவதில்லை அரைமணி நேரம் ஒருமணி நேரம் காத்திருந்தேனும் வண்டியேறிச் செல்கின்றனர். கலியாணம், சீமந்தம் சுருமாதி முதலிய கருமங்களைக் கடன் பட்டேனும் பெரும்பொருள் செலவிட்டு விமரிசையாகச் செய்கின்றனர். கடன் வாங்குவதனல் தங்களுக்குப் பின்னர் துன்பம் விளையுமே என்பதைச் சிறிதுஞ் சிந்திப்பதில்லை. கடன் வாங்கும்போது திருப்பிக் கொடுத்துவிடலாமென்ற எண்ணத்தோடுதான் வாங்குகின்றனர். பிறகு அக்கடனைத் தீர்க்க வகையில்லாமையினல் வருந்துகின்றனர். அவ்வருத்த மேலீட்டினல் ஏமாற்றம் முதலிய தீச்செயல்களை அனுஷ்டிக்கின்றனர். எவருக்கும் கடன்வாங்கும்போதுள்ள மகிழ்ச்சி திருப்பிக் கொடுக்கும்போதிராது. கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது எங்கும் உள. அச்சங்கங்களில் எவ்வளவு கடன் வாங்கலாமோ அவ்வளவையும் வாங்கியிருப்பார்கள். அக்கடன் பலருக்கு நிரந்தரமாய் இருந்துகொண்டே வரும். இப்படித் தீராக்கடன்பட்டுக் கலியாணம் முதலிய சடங்குகளைச் செய்வானேன்? பெருமையினும் பின்னர் வருஞ் சிறுமை அதிகமன்றோ?

சினிமாவுக்குப்போதல், சுருட்டுக்குடித்தல், குதிரைப்பந்தயத்தில் பொருள் செலவிடல் அதாவது சூதாடல் முதலிய தீய பழக்கங்கள் இக்காலத்தில் அதிகரித்துள்ளன. இவையெல்லாம் வீண் செலவின் பாற்படுவன. இவற்றைக் கூடியமட்டும் ஒழிப்பதற்குக் கடவுள் வழிபாடு, தேவார திருவாசக பாராயணம் முதலிய நற்கருமங்களைப் பழகிக்கொள்ளுதலாம்.

# ஆண்பிள்ளையிறந்தால் ஆசௌச மனுட்டிக்கும் முறை

பிரமஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

"ஒண்யரிக்கி னுமகரணத்துணையு
நானஞ்
சிறந்திடு மாணியமே கந்தெந்த
முதிப்பளவுந்
திரிதினஞ் சூடாகருமத்தளவு
மின்னுமதிகம்
நிறந்தருஞ் சிருபயன நிகழ்வரை
பூரணமே"

(இ-ள்) நாமகரணத்தின் முன் ஆண் பிள்ளை யிறந்தால் ஸ்நாநத்தாற் (உடன்) சுத்தியாம் நாமகரணததின் மேல் ஆறு மாசம்வரையி லிறந்தால் மூன்றுநாளாசௌசமாம். உபநயனம் வரையி லிறந்தால் இன்னுஞ்சொற்ப அதிகமாம். உபநயனத்திற்குமேலிறந்தால் பூரணசௌசமாம்.

விசேஷவிதி வருமாறு:—சௌளமானபின் அதாவது மூன்று வயசின்மேல் இறந்தாய் தகனஞ்செய்தல் வேண்டும். நாமகரணத்தின்முன் இறந்தால் அதாவது பதினொருநாளைக்குமுன் இறந்தால் புதைக்கவேண்டும். பல் முளைத்தபின் இறந்தால் தகனமாவது புதைத்தலாவது செய்யலாம். தகனஞ் செய்தால் ஒருநாளும் புதைத்தால் உடனே ஸ்நாநத்தால் சுத்தியாம். பல்முளைக்குமுன் புதைத்தால் ஒருநாளும், தகனமானல் மூன்று நாளும், பதினொருநாளைக்குமேல் பல்முளைத்தற்கு முன் சிசு இறந்தாம் புதைத்தலாவது தகனமாவது வசதிப்படி செய்யலாம். பல் முளைத்தற்கு முன்னுவது ஆறும் மாசத்திற்குப் பின்னுவது தகனமேனும் புதைத்தலேனும் செய்யலாம்.

கர்ப்பம் நழுவின விஷயத்திலும் பிறந்தவுடன் இறந்தாலும் பல் முளைத்தபின் ஆறுமாசத்திற்குள் இறந்தாலும் அக்குழந்தையை யெடுத்து வஸ்திரம் முதலியவைகளால் அலங்கரித்து குழியை வெட்டி மெதுவாய் வைத்து மூடிவிடவேண்டியது; உடன் ஸ்நானம் செய்தால் சுத்தியாம். பல்முளைத்த குழந்தையைக் குழியில் மூடினல் ஒருநாளாசௌசமாம்,

பற்கள் முழுதும் முளையாமல் கொஞ்சம்முளைத்த குழந்தை இறந்தால் சசேல ஸ்நாநம் (உடுத்திய வஸ்திரத்துடன் ஸ்நாநஞ்) செய்தால் அத்துடன் ஆசௌசமில்லையாம்

இவ்வுண்மைகளை யறியாமல் உடன் பிறந்த சகோதரனுடைய ஆறுமாசக் குழந்தையிறந்தால் சகோதரன் முதலிய ஞாதிகளுக்குப் பூரணசௌசம் சுபகருமங்கள் செய்யக்கூடாதெனக் கட்டளை செய்பவருக் கென்செய்வது?

**யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி**
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்பதும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
மனேஜர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

**கந்தசாமி வைத்தியர்**
**அமிர்த சர்க்கரை லேகியம்**

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக்கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீக்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் ரூத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
வல்வெட்டித்துறை —

Std. 3 1-7-47—30-6-48 (செ)

**பசந்த லேகியம்**

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்தியர்

## செல்வத்தைச் சுரண்டுகின்றனரா?

இலங்கையை இந்தியர் சுரண்டுகின்றனரா? அப்படிச்சுரண்டித்தான் வந்து இந்நாட்டின் செல்வத்தை எல்லாம் இந்தியாவுக்குக் கொண்டுசெல்கின்றனர் என்ற ஓர் தப்பபிப்பிராயம் இலங்கையில் ஓர் சாரார்க்கிடையே இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆனல், பிரிட்டிஷார் இலங்கையைச் சுரண்டியதுபோல, இந்தியர் சுரண்டவேயில்லை என்று சென்றவாரம் கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் இலங்கை இந்தியக்காங்கிரஸ்சார்பாக பாராளுமன்றத்தவராகத்தெரிவுசெய்யப்பட்ட ஸ்ரீ இராஜலிங்கம் கூறினர். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜனப் உபயதுல்லாவுக்கும் திரு. தேவநாயகத்துக்கும நடைபெற்ற உபசாரணைக் கூட்டத்திலேயே ஸ்ரீ ராஜலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்,

திரு. எஸ். ஆர். எம். வள்ளியப்ப செட்டியார் பேசும்போது இலங்கையில் வாழும தொழிலாளமக்கள் அனைவரும் இலங்கையையே தமது தாயகமாகக் கொள்ளவேண்டும் என்றார், கௌரவமான முறையில் நடந்துகொள்ளவேண்டுமென்றும் கூறினர்.

திரு. ராஜலிங்கம் பேசும்போது வெள்ளையர்கள் இந்தியாவைச் சுரண்டியதுபோல இந்தியர்கள் இலங்கையில் சுரண்டல் கொள்கைகளைக் கையாளுகிறார்களென்று சிலர் கூறுகின்றனர், ஆனல் அவர்கள் சிறிது சிந்தனை செய்வார்களானல் இந்தியர்கள் இங்குவந்து சுரண்டவில்லை — இலங்கையின் செழிப்புக்கு ஒத்துழைக்கின்றனரென்பதை அவர்களறிவார்கள் என்றும், சாய்ப்புச் சட்டம் சரிவர அமுல் நடத்தப்பட வேண்டுமென்றும குறிப்பிட்டார்.

அடுத்தபடியாகப் பேசிய திரு. தேவநாயகம், இந்தியர்கள் பிறந்த நாட்டைவிட்டு வேறிடம் செல்லுகின்றனர் பிழைப்புக்காக—அங்கு அவர்கள் இழிவு செய்யப்படுகின்றனரென்றால் அது நம் நாட்டின் துர்ப்பாக்கியமேதவிர வேறல்லை என்றும், இனியும் பிற நாட்டில் இந்தியர்களுக்குச் செய்யும் கொடுமைகளை இந்தியா சகித்துக்கொண்டிருக்காது. எந்த நாடாயிருந்தாலும் இந்தியா தக்க நடவடிக்கைகளை நிச்சயம் எடுத்துக்கொள்ளும என்று குறிப்பிட்டார் பின்னர் ஜனப் உபயதுல்லாபேசும்போது, இந்தியாவிற்குக் கிடைத்திருக்கும் சுதந்திரம் அகில ஆசிய நாடுகளுக்கும் கிடைத்துள்ளசுதந்திரமென்றும் இன்றில்லாவிட்டாலும் நிச்சயமாக இன்னும் 3 வருஷங்களில் பாகிஸ்தான் இந்துஸ்தானுடன் சேர்ந்தே தீரும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

ஒறுத்திடு மவுணர்க ளொழிய வேரோடும்
அறுத்தருள் உணர்விலா அளியர் உன்னடி
மறத்தலி லன்பினர் மற்றின் னேர்பிழை
பொறுத்தருள் கருணையாற் புணர்போன்றுளாய்.

கருணையிற் கடலையொத்த பெருமானே! இத்தேவர்க ளனைவரையும் வருத்துகின்ற அசுரர்கள் மாளும்வண்ணம் அவர்களை நிர்மூலமாக்கியருள்க, இத்தேவர்க ளெனிலோ மெஞ்ஞான மில்லாதவ ரெனினுந் தேவரீருக்கு அடியாராவர், தேவரீருடைய திருவடிகளை ஒருபோதும் மறவாத பத்தி பூண்டவர், (ஆதலால்) இவர்கள் (அபுத்திபூர்வமாகச் செய்த) தவற்றினைப் பொறுத்து இவர்களுக்கு அருள்புரிக என்பது கருத்து.

சூரபன்மன் முதலிய அசுரர்கள் தேவர்களாகிய தம்மவர்களை வருத்துகின்றாராதலின், சுவாமி தேவரீர் அவ்வசுரர்களுக்கு மறக்கருணை செய்வீராக என முருகக்கடவுளை வியாழபகவான் வேண்டினராதலின் "ஒறுத்திடு மவுணர்க ளொழிய வேரோடு-அறுத்தருள்..." என்றார்; இப்பெரும்பிழையைத் தேவரீருக்கு இத்தேவர்கள் அபுத்தி பூர்வமாகச் செய்தமையினாலும் இவர்கள் தேவரீரிடத்து மெய்யன்புடையராதலினாலும், தேவரீரை எக்காலத்துஞ் சிந்திக்கின்றவர்க ளாதலினாலும், தேவரீரெனிலோ கருணையங் கடலாய் விளங்குதலினாலும் இந்திரன் முதலிய இத்தேவர்கள் செய்த அபராதத்தைத் தேவரீர் பொறுத்தருள்கவென வியாழன் முருகவேளை இரந்தவாறும். (75)

பரமுற வணிகரைப் டரித்துப் பல்வளந்
தருகலங் கவிழ்ந்திடச் சாய்த்து மற்றவர்
ஒருதலை விளிதல்போல் உன்னிற் பேறிடுந்
திருவினர் பொருதுனைச் செருவிற் றுஞ்சினர்.

பாரத்தோடு கூடிய பல பண்டங்களைக் கொண்டும், (அப்பண்டங்கட்குரியவர்களாகிய) வணிகர்களைச் சுமந்து கொண்டும் போகின்ற தோணியை அதன் நண்ணே யுள்ளவர்களாகிய வணிகர்களே) அம்மரக்கலம் கவிழும்படி சாயச்செய்து (அச்செயலினல் தவறுது மாண்டுபோதல்போல) தேவரீர் மூலமாகவே பெறும் செல்வத்தோடு கூடிய தேவர்கள், தேவரீருடன் (மாறுபட்டு) யுத்தஞ்செய்து தாமே மாண்டனர் என்பது கருத்து.

வணிகராயுள்ளார் தமக்குரிய சரக்கைத்தம்மரக்கலத்திலேற்றி மீகாமன் மூலமாகவே கடல்மீது செலுத் தருவரேல், அம் மரக்கலத்துக்கு யாதும் ஆபத்து நேரின் அவ்வணிகருடைய பண்டங்களுக்கும் (சிலசமயம்) மீகாமனுயிருக்குமே சேதம் நேரும்; அங்ஙனமின்றி அவ்வணிகரே தமக்குரிய சரக்குகளை யெல்லாம் தோணியிலேற்றித் தாமும் அத்தோணியில் ஏறிச் செல்லும்போது, தாமாகவே அத்தோணியைக கடலிற் கவிழ்த்து மூழ்கச் செய்வரேல், அவ்வணிகர் தம் பொருளோடும் மரக்கலத்தோடும் தமமுயிரோடும் ஒருங்கு மாள்வர்: அதுவேபோல், தேவரீரையே பல்லாற்றானும ஆதாரமாகக் கொண்டு தம் பகைவராகிய அசுரவெள்ளத்தைத் தேவரீர் மூலமாகக் கடந்து ஈடேறவேண்டிய இததேவர்கள், அறியாமையினல், தேவரீரோடு மாறுபட்டுப் பொருது தாங்கள தேவரீர் வாயிலாக அடையக்கூடிய பல நலன்களோடு தம்முயிரையும் இழந்தனரென வியாழன் முருக மூர்த்திக்கு விண்ணப்பஞ் செய்தவாறும்.

இனி, இறைவனாற் கொடுக்கப்பட்ட தநுகரணபுவன போகங்களாகிய சரக்குக்களை, இறைவனுடைய திருவடியாகிய புணையில் ஏற்றிக்கொண்டு பிறவிப் பெருங்கடல் நீந்தி முத்தி யென்னுங் கரையை யடையவேண்டிய உயிரானது, தனக்கு இறைவன் உதவிய தனுகரணபுவன போகங்களை நல்வழியில் உய்த்து ஈடேறுதலை விடுத்து, நாத்திகம்பேசி அத்தநுகரணபுவன போகங்களைத் தீயவழியிற்செலுத்திப் பிறவியென்னும் பெருங்கடலுள் ஆழமாக மூழ்கி மாள்வதுபோல எனனும் ஞானக்கருத்துத் தொனித்தல் காண்க. வணிகரைப்பரித்துப் பரமுறப்பல் வளந்தரித்து எனக் கொண்டு கூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. (76)

தொழத்தகு நின்னடித் தொண்ட ராற்றிய
பிழையது கொள்ளலை பெரும சிந்தையுள்
அழிதரு மினையவர் அறிவு பெற்றிவண்
எழுவகை யருளென இறைஞ்சிக் கூறினான்.

எம்பெருமானே, வணங்குதற்குரிய தேவரீருடைய அடித்தொண்டர்களாகிய இததேவர்கள் செய்த பிழையைத் திருவுளத்திற் கொள்ளற்க. முந்தியே மனமுடைந்தவர்களாகிய இத்தேவர்கள் நல்லறிவைப் பெற்று இப்பொழுதே உயிர்த்தெழும்வண்ணம் திருவருள் செய்தருள்க என்று மீளவும் வணங்கி விண்ணப்பஞ் செய்தார் (வியாழபகவான்) என்பது கருத்து.

இத்தேவர்கள் ஞானமில்லாதமையோ டமையாது சூரபன்மன் முதலிய அசுரர்களால் நலிவுற்று உள்ளமுடைந் திருந்தமையினல் இப்பெரும பிழையைத் தேவரீருக்குச் செய்துவிட்டார்கள். ஆதலின் இவர்கள் செய்த பிழையைப் பொறுத்து இவர்களை நல்ல ஞானத்தோடுகூடியவர்களாய் எழுப்பியருளுக என வியாழன் சண்முகத் தெய்வத்தை இரந்தவாறும்.(77)

பொன்னவ னின்னன புகன்று வேண்டிட
முன்னவர் முன்னவன் முறுவல் செய்துவான்
மன்னவ னாதியர் மால்க ளிற்றொடும
அந்நிலை யெழும்வகை யருள்செய் தானரோ.

வியாழபகவான் இங்ஙனமெல்லாம் விண்ணப்பஞ்செய்து இரந்து நிற்ப, முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய முருகவேள் புன்முறுவல் பூத்து, சுவர்க்கலோகாதிபனாகிய இந்திரன் முதலிய தேவர்களை ஐராவதமென்னும் யானையுடன் உயிர்பெற்றெழச் செய்தருளினர் என்பது கருத்து. (78)

# திருச்சி ரேடியோ

புதன் நவம்பர் 26

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டபிள்யு எஸ் ராமநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 திருத்தங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 திருத்தங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 திருத்தங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 டபிள்யு எஸ ராமநாதன் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 5 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 நகைச்சுவை வேண்டும் 7 30 தமிழில் செய்திகள் 7 45 புதிய வெளியீடுகள் இசைத்தட்டு 8 காமாக்ஷியின கனவு நாடகம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 45 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

வியாழன் நவம்பர் 27

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எச் ராமநாதய்யர்பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 தேசமங்கலம் ஆர் வெங்கடேஸ்வரய்யர் வீணை 9 முடிவு

1 ஆரம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சென்னுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 குரல்வகை இசைத்தட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 எச் ராமநாதய்யர் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 என் வி வசந்தகோகிலம் இசைத்தட்டு 7 15 நையாண்டி விசாரணை 7 30 தமிழில் செய்திகள் 7 45 மைலம் பி ஜராவேலு முதலியார் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 45 தேசமங்கலம் ஆர் வெங்கடேஸ்வர ஐயர் வீணை 10 30 முடிவு.

வெள்ளி நவம்பர் 28

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எஸ் ஸ்ரீனிவாச ராகவாச்சாரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 வி ராமாமிருதம் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எஸ் ஸ்ரீனிவாச ராகவாச்சாரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் ஸ்ரீனிவாசராகவாச்சாரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் ஸ்ரீனிவாச ராகவாச்சாரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் ஸ்ரீனிவாச ராகவாச்சாரி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருக்கோவிலூர் எஸ் அலமேலு பாட்டு 5 40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 இஞ்சிக்குடி கே பிச்சைக்கண்ணு நாகஸ்வரம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 கலப்பு தினசரி வாழ்க்கையில் 8 திருக்கோவிலூர் எஸ் அலமேலு பாட்டு 8 30 இஞ்சிக்குடி கே பிச்சைக்கண்ணு சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாட்டுப் பாடல்கள் 9 20 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 குரல்வகை இசைத்தட்டு 10 [illegible] 10 30 முடிவு.

## தேகவியோகம்

### ஸ்ரீமான் சி. முத்துவேலு J P

கோக்குவில் பிரபல குடும்பத்தவரும் 15 வருட காலமாக கோக்குவில் கிராமச் சங்கத் தலைவராக இருந்தவரும்,நந்தாவில் மனோன்மணி அம்மன்கோவிற் பரிபாலன சபைத் தலைவரும், பொதுஜன சேவையே தமது சேவையாகப் பணியாற்றியவரும். அரசாங்க நீர்ப்பாய்ச்சல் பகுதி உத்தியோகத்திலிருந்து இளைப்பாறியவரும்,உந்தரவு பெற்ற காணி அளவைக்காரரும், சமாதான நீதிபதியுமாகிய ஸ்ரீ சி. முத்துவேலு அவர்கள் தமது 80வது வயதில் இந்த நவம்பர்மீ 17ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் கோக்குவிலிலுள்ள நமது இல்லமாகிய 'சிலம்புவளவில்' சாத்திராப்பிரகாரமாய் ஏற்பட்ட நோய் காரணமாகச் சிவபதமடைந்தார்.

அன்னரின் இரு புதல்வர்களாய மாத்துறை பகிரங்க வேலைப்பகுதிப் பரிசோதகராகிய திரு மு. குமாரசிங்கம் அவர்களினதும், வழக்கறிஞர் திரு மு மதியாபரணம் அவர்களினதும், மனைவி, மருமக்கள், பேரப்பிள்ளைகள், இனசன சமூகத்தில் அடுத்தநாட் செவ்வாய்க்கிழமை சைவ முறைப்படி ஈமக் கிரியைகள் பகல் 2½ மணியளவில் மக்களாற் செய்யப்பட்டன, அன்னரின் ஆன்மா சாந்தியடைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பஞ்சாக்கர மகிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பே எதிர்நிறனிறைபாக நிறுத்தி யகாரமானது நடுவேநிற்குமாறு "விகடகவி" என்பதுபோலத் தொடுத்து நிற்பதே காரண பஞ்சாக்ஷரம் எனப்படும். இதனை விகடகவி என்னுஞ் சொல்லில் 'ட' நிற்குமிடத்தில் யகாரத்தையும், 'க' நிற்குமிடத்தில் வகாரத்தையும், 'வி' நிற்குமிடத்தில் சிகாரத்தையும் வைத்தெழுதி யறிந்துகொள்க. இக்காரண பஞ்சாட்சரத்தைப் பெரியோர்கள் இருதலைக் கொள்ளியெனவும் இருதலை மாணிக்கம் எனவும் குறியீடு செய்து வணங்குவர். இது சாமானியர்க் குபதேசிக்கப் படுவதன்று.

இக் காரண பஞ்சாக்கரமாகிய சிகார வகாரங்களுக்குள்ளே, யகாரமாகிய வான்மாவானது சிகாரமாகிய சிவத்தினுல் வகாரமாகிய அருளிலே இலயப்பட்டு நிற்க, அருளும் சிவமுமாகிய வகாரம், சிகாரம் என்னும் இரண்டுமாத்திரமாய் நின்று விளங்குவதே மகாகாரண பஞ்சாட்சரமெனப்படும். இது சுவேதாச்சுவதாரம், பிருகதாரணியம் கடகவல்லி முதலிய உபநிடதங்களில் துரிய பிரமத்தின் திருநாமமாகத் தொனிக்கப்பெற்று விளங்குகின்றது. இது தமிழ் முறையில் முதனீண்டு "வாசி" எனவும், வடமொழிச் சுருதியில் இறுதி நீண்டு "வஹி" எனவும் ஓசை பயப்ப நிற்கும். இதனை "வாசிபருளிபதை வாழ்விக்கு மற்றதுவே—பாசி லுநவமுமாமங்கு" என்னும் திருவருட் பயனும், "வாசிவாவென்று வாசியை வைத்து, வாசியோடொன்ற வகையறிவாளர்க்கு, வாசியோ டீசன் மகிழ்ந்திருந்தானே" என்னுந் திருமந்திரத்தாலும் அறிக.

இம்மகாகாரணபஞ்சாட்சரமாகிய துரிய மந்திரமே சிவன் சிவை சிவம் என்னும் முப்பாற் பொருளும் பெறப்படுமாறு அதீதப் பொருளாய் நின்ற பரப் பிரமத்திற்கு யோக விசேட நாமமாய் அமைந்து சிவ என விளங்கிநிற்பதாம். இதுபற்றியே கொடிய சண்டாளனுயினும் சிவ என்னும் நாமத்தை உச்சரிப்பானுயின் அவனேடு பேசுக, அவனேடுவசிக்க, அவனேடிருந்துண்ணுக என்று முண்டகோப நிடதம் முறையிடுகின்றது.

இம்மகாகாரண பஞ்சாட்சாமாகிய சிகார வகாரங்களிரண்டினுள், வகாரமாகிய அருளையும் தன்னிடத்து வயப்படுமாறு அடக்கிக்கொண்டுசிகாரமாகிய பதியெழுத்து மாத்திரமாய் தனித்து நிற்பதே முத்தி பஞ்சாட்சரமெனப்படும். இதனைப்பெரியோர்கள் நாயோட்டு மந்திரமெனவும்: மகாமனுவெனவும், இறையெழுத்தெனவும், பெருவெழுத்தெனவும், பிரமபீஜமெனவும் பரிபாஷையாக வழங்குவர். இதன் பெருமை மகா சிவஞானிகளாலேயே அநுபவவாயிலாய் உணரப்படுவதாம்.

ஸ்ரீ பஞ்சாக்கரத்தின்பேருமையளவிடற்கரியது. அநுபவஞானம் அணுத்துணையுமில்லாதஎம்போலிகள் அதின் பெருமையை முற்றிலும்எடுத்துவிரிக்கவிரும்புவது ஒருசுணங்கன்சமுத்திரத்தை முற்றிலும் பாணம்பண்ணவிரும்புவதுபோலாம். ஆதலால் இவ் வியாசத்தை இம்மட்டோடே நிறுத்தினம்.

திருமந்திரம்

நாயேர்ட்டு மந்திர நான்மறை வேத
நாயோட்டு மந்திர நாத னிருப்பிட
நாயோட்டு மந்திர நாதாந்த சோதி
நாயோட்டு மந்திர நாமறி யோமே:

தமிழ்வேதம்

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னறி காட்டுமே.

திருமந்திரம்

ஐம்ப தெழுத்தே யனைத்துவே தங்களும்
ஐம்பத் தெழுத்தே யனைத்தா கமங்களும்
ஐம்பத் தெழுத்தி னடைவை யறிந்தபின்
ஐம்ப தெழுத்தே யஞ்செழுத் தாமே.

பிரமோத்தர காண்டம்

முத்தி நன்னறிக் கோருதுணை
மோகவா ரிதிக்கு
வைத்த சேஞ்சிகை வடவனல்
வினைவ னத்திற்குப்
பொத்தி நுந்துவெங் கதழெரி
புனைமதிக் கண்ணி
பத்த னேந்தையஞ் செழுத்திது
கடைப்பிடித் தறிவீர்.


# சைவக் கிரியை விளக்கம்

இது சைவ நன்மக்கள் தாம் செய்யும் சமயக் கிரியைகளின் உட் கருத்தையும், நோக்கங்களையும் எடுத்து இலகுவில் விளக்கும் தமிழ் வசன நூலாதும், இதனை எழுதியவர்:

**ஆசிரியர், திரு. சு. சிவபாதசுந்தரம், (B.A.) அவர்கள்**

இதன் இரண்டாம் பதிப்பு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் வெளியீடாக வுள்ளது.

**விலை சதம் 50 (8 அணு)**

வண்ணார்பண்ணை 4-11-47

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாசயந்திரசாலை



# மலேயாவுக்குக் கப்பல் பிரயாணம்

யாழ்ப்பாணம்—சென்னபட்டணம—
பினங்—சிங்கப்பூர்

சென்னபட்டணம் மார்க்கம் பினங், சிங்கப்பூருக்கு மாதம் இருமுறையும் நேரே சிங்கப்பூருக்கு ஒருமுறையும் வசதிகளடங்கிய,

**கப்பல் பிரயாணச் சீட்டு**

எம்மூலம் 1947 நவம்பர் மாதம் தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்

எஸ். ஆர். எஸ். நாதன்
21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்

Std 22. 6-6-47—6-6-48



# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி.
**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

(Std 29 1-8—30-7-48)



மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச் செலவு எல்லாம் உட்பட, நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபா 130-க்கு எங்கள்மூலமாக பெற்றுக்கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக் கணக்கானேர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ் செய்து திருப்தியடைந்துகொடுத்த நற்சாட்சிகள் அநேகமுண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறேம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்வலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, காங்கேசன்துறை ரேட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்
தந்தி (Srivel) :: : பிராஞ்சு: நாகபட்டணம்.

3) 2—9—47&28-2-48


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Tuesday November 25, 19[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org